# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 4692/D/2024**

திரு சி.பொன்னுசாமி .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
பாக்கெட் 6, வணிக வளாக கட்டிடம்,
1வது பிரதான சாலை, சி.ஐ.டி.நகர்,
சென்னை - 600 035. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 23.09.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 07.10.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு சி.பொன்னுசாமி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி M.சசிகலா, உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.ஐ.டி.நகர், சென்னை - 600 035 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 23.09.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திரு வீ.சூரியமூர்த்தி B.E. என்ற பொதுத்தகவல் அலுவலர் எந்த பிரிவில் ஐடி 512 கடிதம் அனுப்பி உள்ளார் என்பது பற்றிய விவரம், தற்போதைய பணிக்கு முன் எத்தனை அலுவலகங்களில் பணி செய்துள்ளார் என்ற விவரம், 28.08.2024 தேதியிட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் தொடர்பான 4 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 07.10.2024 தேதியிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய 28.08.2024 தேதியிட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம், இதுநாள் வரையில் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய 28.08.2024 தேதியிட்ட மனுவானது தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன்கீழ் செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பாக்கெட் 6, வணிக வளாக கட்டிடம், அண்ணா நகர் பிரிவு, சி.ஐ.டி.நகர், 4-வது தளம், சென்னை -35 அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பாக்கெட் 6, வணிக வளாக கட்டிடம், அண்ணா நகர் பிரிவு, சி.ஐ.டி.நகர், 4-வது தளம், சென்னை -35 அலுவலகப் பொதுத்தகவல் அலுவலர் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு***

*அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP 4692/D/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
பாக்கெட் 6, வணிக வளாக கட்டிடம்,
1வது பிரதான சாலை, சி.ஐ.டி.நகர்,
சென்னை - 600 035.

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
அண்ணா நகர் பிரிவு, 4வது தளம்,
பாக்கெட் 6, வணிக வளாக கட்டிடம்,
1வது பிரதான சாலை, சி.ஐ.டி.நகர்,
சென்னை - 600 035.

**<u>மனுதாரர்</u>**
திரு சி.பொன்னுசாமி,
க.எண்.293, E.H.ரோடு,
வியாசர்பாடி,
சென்னை - 600 039.

***Copy to: File***
***VP / PA***